ஓலை 88 | ஓசை 211 | செப்டம்பர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை




அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

## பொருள்

அன்பு இல்லாதவர் எல்லாப்பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார். அன்பு உடையவர் தம் உடமையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com

# உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு!

## மரபு பா கற்போம் — நேரிசை ஆசிரியப் பா




பசியில் அமர்ந்து பசியுடன் எழுந்து
புசித்தல் குறைத்துப் பொன்னுடல் காத்தால்
அணங்கை அழகோ அருமை யாகும்;
சுனங்கி உடலும் தொங்கியே போகா,
நோய்கள் நெருங்கா; நெஞ்சம் தளரா;
வாய்க்குச் சுவையென வாரி உண்டு
தொப்பை விழுந்து சோம்பல் மிகுந்தால்
இப்பிற வியேனெடுத் தோமென வருந்திட
உடலைத் தூக்கி உலவிட முடியா;
உடலி லெல்லாம் ஓரா யிரம்வாய்
உடமையாய்ப் பெற்ற ஊக்கம் கொண்டு
அடங்கா அவாவால் அள்ளி யெதையும்
நடக்க இயலா நிலையில் மாறிட
தடமும் மாறி தளர்ந்துமே போயிட
உண்டி சுருங்குதல் உதறித் தள்வதா?
பெண்டீர்க் கழகே உண்டி சுருங்குதல்
என்றே உணர்ந்து உடலைக் காப்பீர்;
என்றும் உரமுடன் இனிதே வாழ்வீர்;
கொடியிடைக் கொண்டு குவலயம் தன்னில்
தடியு மின்றித் தளிர்நடை பயின்றே
இல்லறம் செழித்துதான் ஏற்றம் பெறவே
அல்லும் பகலும் அரும்பணி யாற்ற
உள்ள உரத்துடன் உண்டி சுருங்குதல்
வெள்ளமாய் இன்பம் வீறுடன் பாய்ந்திட
ஔவையார் உரை அகத்தில்
கௌவியே வாழ்தல் களிப்புறும் நலனே!




**இலக்கணக் குறிப்பு:**

நான்கு சீர்கள் இயற்சீர் கொண்ட சீர்களாக ஒவ்வொரு அடியிலும் வரும் இரண்டடிக்கோர் எதுகை பெற்று வரும். அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். பாட்டு முடியும் ஈற்றடிக்கு முன்னால் உள்ள ஈற்றயலடி மூன்று சீர்கள் வந்து ஈற்றடியில் நான்காம் சீர் ஏகாரத்தில் முடியும். எத்தனை அடிகள் வேண்டுமானாலும் எழுதலாம்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

பாவகை : பஃறொடை வெண்பா

இசையும் பணமும் இருந்திடும் வேளை
நசைவுமே கொண்டால் நலிவது நீர்க்கும்.
வசையை மொழிந்தால் வலிந்தே அழிவாம்.
விசையுறு பந்தாய் விரைந்து திரும்பும்.
அசைவின்றி நாளும் அடக்கம் மிகுந்தால்
பசையாய்த் தொடருமே பண்பு.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# பழமொன்ரியுக்கள்

சாதி அந்த புத்தி
குலம் அந்த ஆசாரம்
ஊறுகாயின் சாமார்த்தியங்கள்

சாம்பலைத் தின்று
வெண்ணெய்யைப் பூசிக் கொள்வோம்
வெளிநாட்டு முதலீடுகள்

சிறுக விதைக்கிறோம்
அடியோடு அறுத்துத் தொலைக்கிறார்கள்
G .S .T கொள்ளைகள்




சுடு கெண்டைக்காக
ஏரியை என்ன கடலையே!
சுங்க வதைகள்

சூடு கண்ட பூனைகள்
மீண்டும் மீண்டும் அடுப்படியில்
கள்ளச்சாராய கழிவுகள்

கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# உள்ளதில் பிறர்க்கு கொடுத்தல்

## பாவகை : நேரிசை ஆசிரியப்பா

பிறர்க்கே உதவும் பெருங்குணம் இருந்தால்
அறமும் வளர்ந்து அமைதி தழைக்குமே
வாடியே நிற்பவர் வாழ்வு  செழித்திட
தேடியே சென்று தேவை தீர்த்தால்.
நாடியே வருமே  நன்மையும் உனக்கே.
உள்ளதைக் கொடுக்கும் உள்ளமும்
வள்ளல் வடிவில் வாழும் புவியிலே.



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# ஊரணி நட்பே

அமுதத்தை அள்ளி அள்ளி
ஆருயிரைத் தழுவி தழுவி
குமுதமேவுன் கொஞ்சு தமிழோ
குற்றால அருவி அருவி
தமயந்தி அன்பில் நானும்
தவணையின்றி இன்பம் காண
அமைத்திட்டான் உறவை *அமுதன்
அழகாக உனக்கும் எனக்கும்

வெகுதொலைவில் இருந்தும் கூட
வீணை மீட்டும் உந்தன் நினைவு
தொகுத்திடுதே இன்ப ராகம்
தொடர்ந்திடுதே அன்பை நாடி
உகுக்கின்ற கவிதை வரியில்
உணர்ந்திடடி என்னை நீயும்
பகுப்புகளும் இல்லை இங்கே
பரிசுத்த உள்ள மதிலே



ஆரணங்கே நீயும் எந்தன்
அகத்திற்குள் ஐக்கி யமடி
காரணங்கள் தேவை இல்லை
கவின்கூட்டும் நட்பை நாடி
ஊரணியாய் உந்தன் நட்பே
ஊக்கத்தை ஊட்டும் தோழி
தோரணமாய் மாறி வாழ்வை
துள்ளலோடு நகர்த்தும் நண்பி.

அமுதன் - கடவுள்

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# தேடியலையும் உயிருக்கு

உயிர்ச்சுரங்களின் தாளலயங்களில்
இசைத்தடயங்களைத் தேடுகிறேன்
யானை பார்க்கும் குருடன் போல்.
ஓடும் மேகங்களின் உயிர்ச் சங்கிலிகளில்
ஒளிந்து கொண்டிருக்கும்
பூமியின் எதிர்பார்ப்புகளை பொறுக்குகிறேன்
காதலியிடம் யாசிக்கும் காதலன் போல்.
நீள் கனவுகளில் நேசம் கூட்டி நெருப்பாற்றில் நீந்தி
என்னைக் கரை சேர்த்த அன்னையின்
தியாகத்தை யாசிக்கிறேன்
உயிர் வாழ இழுத்துக் கொண்டோடும்
தொலைதூர வேலையிடம்.
ஆசைகளின் ஒட்டுதல்களோடு வாழ்ந்த உயிர் விடுத்து
அறியாத முக மிரட்டல்களை எதிர்நோக்கி
வாழப்போகும் இடம் பார்க்கும் மணப்பெண்ணைப் போல
நேசம் கொள்ளும் உயிர் வேண்டுகிறேன்
முற்றுப்பெறாத வாழ்க்கையிடம்.
சுவாசக் காற்றின் நச்சுகள் கூடி
உயிர் குடிக்க உறிஞ்சும் நீரும்
விஷமாகி வேரறுத்தபின்
பசுமையைத் தேடும் மரக் குழந்தையாய்
மனங்களிடம் ஈரத்தடங்கள்
தேடித் திரிகிறேன்.
எல்லாவற்றையும் மென்று விழுங்கி
ஜீரணித்துச் சிரிக்கும் மனதிடம்
எப்படிச் சொல்வேன்
அகதிப் பட்டம் நீங்கி
உயிர் கொடுத்து உடல் ஏந்தும்
தாய் மண்ணை முத்தமிடும்
பொழுது வரப்போவதில்லையென.



கவிஞர் இளையவன் சிவா, நரசிங்கபுரம்

அண்ணா என்னும் மூன்றெழுத்து!
அறிவான பொன்னெழுத்து!
காஞ்சியில் பிறந்த கண்ணெழுத்து!
பகுத்தறிவால் பகிர்ந்த பண்ணெழுத்து!
திராவிடத்தால் வளர்ந்த திண்ணெழுத்து!
பண்பால் விளைந்த
திராவிட கிழவனின் இளைஎழுத்து!
ஆங்கில இலக்கியத்தை உடைத்த ஆயுத எழுத்து!
இரண்டே ஆண்டுகள் தமிழகத்தை ஆண்டு
இமயம் என உயர்ந்து நிற்கும் தமிழ் எழுத்து !



கவிஞர் தினேஷ்கண்ணா, வழுதூரவூர்

# மணிமேகலை

## (இருபத்தி எட்டு)

27. சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை . ( பாகம் : ஒன்று )

முனிவர் வடிவில் மணிமேகலை சமயவாதிகள் சந்தித்தாள்
"நீர் மேற்கொண்டுள்ள சமய கொள்கைகள் யாது ?" கேட்டாள்
முனிவர்ஒருவர்வைதிக மார்க்கம் .பிரமாண வாதி பதில்
என் ஆசிரியர் மூவர் வேதவியாசன், கிருதகோடி, சைமினி

இவர்கள் அளவைகள் பத்து, எட்டு, ஆறு தம்தம் கூறுபாடு
அவர் சொல்லும் பத்தில் முதலாவது காட்சி ஐவகை யாகும்
எவரும் அறிவது கண்ணால் நிறம், செவியால் ஓசை,
அவரவர் மூக்கால் நாற்றம், நாவால் சுவை, மெய்யால் ஊறும்

கருத்தளவை அனுமானித்து நல்லது கெட்டது உணர்வது
வருவது உவம அளவை ஒன்றோடு ஒன்று ஒப்புமை அறிவது
இருப்பது என்ன என்பதை அறிவால் தெளிவது ஆகம அளவை
அருத்தாபத்தி அளவை , " காசி கங்கை இருக்கும் ", என்றால்
காசி கங்கை கரையில் இருக்கிறது என்ரறு பொருள் கொள்க .



இயல்பு அளவை," கொடு"என்ன என்பதை அறிந்து கொடுத்தல்
பயன் தெரிந்து அவர் கடிதம் எழுத எழுதுகோல் கொடுத்தல்
ஐதிக அளவை வழிவழியாக சொல்லக் கேட்டு நம்புவதாகும்
கயல் விழி என்றதும் அவள் கண்கள் அழகு என்று உணர்தல் .

அபாவ அளவை இல்லாததை இருப்பதாக உணர் , கானல் நீர் .
மீட்சி அளவை "ராமன் வென்றான்," ராமனின் வெற்றி
காட்சி படுத்தப்படுகிறது ராவணன் தோற்றான் என்பதை
உள்ளநெறியளவை ( சம்பவ அளவை ) "காந்தம் "என்றால்
அறிவியல் மூலம் அதன் தன்மைகள் விரிவு படுத்தல் ஆகும்.

அளவைகள் பத்திற்கும் விலக்கப்பட்ட குற்றங்கள் எட்டு உள
அவை கூட்டுணர்வு, திரியக் கோடல், ஐயம், தேராது தெளிதல்
கண்டுணராமை, இல்வழக்கு, உணர்ந்ததை உணர்தல, நினைப்பு.
சமயங்கள் ஆறு, உலோகா யதம், பௌத்தம், சாங்கியம்.
நையாயிகம், வைசேடிகம், மீமாஞ் சகம் என்பன ஆகும்

எல்லாம் அறிந்த மணிமேகலை சைவவாதியைக் கண்டாள்
வல்லமை கொண்ட உலகுக்கு " இறைவன் ஈசன் ஒருவனே
இல்லாத இடமில்லை ஞாயிறு, திங்கள், இயமானன், மண் ,
நீர், தீ, காற்று எட்டினையும் உடம்பாகக் கொண்டவன்,
( இயமானன் — யாகத் தலைவன் )

அவனே அவற்றிற்கு உயிராய் அமைந்தவன், காவலன்,
புவனத்தில் அத்தனை உயிர்களைக் காப்பாற்றுபவன்
அவனே பிறவித் துன்பங்களை தீர்த்தருளும் சிறப்பினன்
நவரசம் தெரிந்த ஈசனே எங்கள் இறைவன் என்றான்


பிரமதேவன் இட்ட முட்டை பெரிய முட்டை இவ்வுலகம்
பரமனே இம்முட்டையில் அடக்கம் என்றான் பிரமவாதி
திருமாலாகிய கடல் வணன் காத்தருளும் தெய்வம்
பெருமைஅவனே நாரணன் என்றான் வைணவவாதி

தொடரும் ...

கவிஞர் ந திருக்காமு

# அவை அறிதல்

## அதிகாரம் : 72




சான்றோர் கூடியிருக்கும்
கூடத்தின் தன்மையறிந்து.
ஆன்றசொற்க ளாய்ந்தறிந்து
பேசுதலே அவைச்சிறப்பாம்.

நல்லறிவுடையோர் தம்மவையில்
செம்மையுடைச் சொல்லறிந்து.
சொல்நடையைத் தானுணர்ந்து
சிறந்தனவாய் சொலல்நலமாம்.

அவைத்தன்மை அறியாது
வாய்ச்சொற் போர்புரிவோர்.
நற்சொல்வகை அறியாதமையால்
ஒன்றிற்கும் உதவாதோராம்.

அறிவினொளி யுடையார்முன்
அறிவுடையோராய்ப் பேசல்நலம்.
அறிவிலாதார்முன் தானும்
அறிவீலிபோல் இருத்தல்நலமாம்.

அறிவுடையோர் அமரவையில்
அவசரக்குடுக்கைபோல் பேசாதிருக்கும்.
அடக்கமென்பதே ஒருவனுக்கு
அனைத்திலும் நல்நலனாம்.

நுண்ணறிவு நுட்பமுணர்ந்தோர்
முன்சென்றுபேசி குற்றமுறல்.
தன்னொழுக்க நெறிநின்று
நிலைதளர்ந்து கெடுவதாம்.

சொற்பொருட்குற்றமற ஆய்ந்தறிந்த
அறிஞரிடத்து நூல்கற்போரின்.
கல்வியறிவு மேலுமவர்க்கு
நல்விளக்கம் பெற்றுத்தருமாம்.

இயல்பாய் உணர்தன்மையுடையோரின்
முன்சென்னு அறிவுரைத்தல்.
தானாய்வளர் பயிரின்பாத்தியூடே
நீர்சொரிந்தார் போன்றதாம்.

நல்லறிஞரவையில் நற்பொருளை
மனம்பதிய சொல்லவல்லோர்கள்.
அறிவீலிகள் கூடத்தில்
மறந்தும்பேசாதிருத்தலே நலமாம்.

நல்லோர் தம்மினத்தாரல்லார்முன்
நற்பொருள்பற்றிப் பேசுதல்.
தூய்மையிலா முற்றம்மேல்
சிந்திய அமிழ்தம்போன்றதாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

எட்டயபுரத்து இரத்தம்
எங்குமே ஓடுதம்மா!
பட்டிதொட்டி எங்கிலுமே
பாட்டு ஒலிக்குதம்மா!
***
"சிந்துவின் தந்தை"நாதம்
சீவியம் நடத்துதம்மா!
கந்துவின் தனிக்கனியாய்
கவின்தமிழ் இனிக்குதம்மா!
***
கண்ணன்பாட்டு இதயப்பாட்டாய்
களிநடனம் புரியுதம்மா!
உன்பாஞ்சாலி உயரியபாட்டு
உலகக்கயமை எரிக்குதம்மா!
***
குயிற்பாட்டதுவோ கொஞ்சுதமிழாய்
குழலினிமையும் விஞ்சுதம்மா!
மயிலாட்டமாகவே மற்றையபாட்டும்
மனங்களையாட்டி மிஞ்சுதம்மா!
***
காக்கையின் சிறகினிலும்
கன்னித்தமிழ் வாழுதம்மா!
பாக்'கையின்' சிறப்பினாலே
பாரதிதமிழ் ஆளுதம்மா!



கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், கிழக்கு மாகாணம் (இலங்கை)

# காலத்தின் தீர்மானம்

ஒவ்வொரு விடுதலைக்கு பின்பும்
ஒரு காலம் உள்ளது
அதை காலமே தீர்மானிக்கிறது
காலத்தின் தீர்மானமே
இறுதியானது உறுதியானதும் கூட !



கவிஞர் சு. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

# வலிதந்த உளிகளுக்கு உரைப்பேன் நன்றியே!

வலிதந்த உளிகளே உரைக்கிறேனுமக்கு நன்றியே;
வலியனுபவிக்கா நிலைவிரும்பி உருண்டிருந்தால் வாழ்வில்
இங்கிருப்போர் ஏளனச்சொல்லெனைப் பார்த்து பேசியிருப்பர்;
இப்போதுமெங்கோ கிடந்திருப்பேன் உயிரிருந்தும் வெறுங்கல்லாய்!

பத்தாம்வகுப்பு பொதுத்தேர்வில் பெற்றதோல்வியினும் வலித்ததென்னால்
பயன்பெற்ற தோழர்கள்கூட பாராமுகம் காட்டியது;
பனிரெண்டாம் வகுப்பில் வந்த கணிதம்கூட
பாரமுகம் காட்டியது கல்லூரி வாழ்வில்!

செய்யாதவறுக்கும் தண்டனைக் கிடைத்தது கல்லூரிவாழ்வில்;
சிறிதுகாலம் கல்லூரி செல்லாது வீட்டில்
சிறைபட்ட காலம்தந்த வலியை எப்படியுரைப்பேன்!

தீயோரிருக்கு மிடத்தில் நல்லோரிருப்பதும் இயற்கையாதலின்
தமிழ்ப்பயில யாதவர்கல்லூ ரியுமீந்தது வோரிடமெனுக்கு;
தகுதியும் வளர்ந்தது தோல்விகள் ஊடேயென்
திறமைகளும் பாராட்டப் பட்டனமதுரை யாதவரில்!



பணியாற்ற வாய்ப்புகளும் கிடைத்தன யெனக்கதில்
பதவியுயர்வுகளும் தட்டிப் பறிக்கப் பட்டன;
புகழ்ந்தனர் சிலரென்றால் இகழ்ந்தனர் வேறுசிலர்!

வெற்றியும் தோல்வியும் புகழும் இகழுமெந்தன்
வாழ்வில் மாறிமாறி விடாது கபடியாடின;
வாழ்வாம் நதியை எதிர்த்து நீந்தாது
வாழ்வு தந்த சோதனைகளை யதன்போக்கில்
வாழ்ந்து பார்த்தபோதெனுக்குப் புரிந்து போனது
வாழ்க்கையில்நான் வெறுங்கல்லாய் கிடக்கவில்லை யென்பது!

வீதியில்கூட என்பாதம் அன்புடன் பணிந்துசிலர்
விளம்பினர் தாங்களுங்கள் மாணவரென் றதனால்
வணங்கிடும் கல்லானேன் ஆசிரியனென்னும் தெய்வமாய்!

உளிபடா கல்லாய் நானிருந்திருந்தா லின்று
உயிர்ப்புடன் வாழ்ந்திட இயலாதென்பதை அறிந்ததாலும்முன்
உலகோரே வலிதந்தவுளிக ளுக்குரைத்தேன் நன்றியே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# ஓடக்கரை ஓரத்திலே

ஓடக்கர ஓரத்தில
ஓடியாந்தேன் சிங்காரமே.
காக்க வச்ச
கானகத் தேவதய.

நாளு பூரா
கண்ணு வலிக்கத் தேடுறேண்டி
சின்னக் கிளியே.

ஆவாரம் பூவும்
காத்திலே ஆடுதடி.
பரிசலோட காத்திருக்கேன்
அக்கர போய்ச் சேரணுமே தங்கமே.

அந்திச் சாஞ்சி பொழுதும் போகுதடி.
ஆனமல பக்கத்தில
ஆத்தா ஒங்கொலுசுச் சத்தம் கேக்குதடி.

இருட்டு வாரதுக்குள்ள
இடம் நகர்ந்தே போணுமடி.
தென்றலும் சூடாக
தொட்டு விட்டுப் போகுதடி.

பாத்த கண்ணும்
பூத்துப் போச்சி.

தண்ணி எடுக்க் கொடத்தோட
கரயோரமா வரச் சொன்ன
சேதி எங்கப் போச்சுதடி.

ஊரு ஆயிரம் வெதமா பேசுமடி
வெங்கலத் தொண்டக்காரி.
உங்கொரலுக்கா ஏங்கிக்
கெடக்கிறேண்டி.



கண்ணுப் பட்டுப்போச்சோ..
வச்ச ஆச எல்லாம்
மல ஏறிப் போச்சோ.

சாரலும் அடிக்குதடி
முள்ளாத் தான குத்துதடி.

கரும்புச் சொல்லுக்காரி
சொணக்கமில்லாம
சீக்கிரமா வந்தே சேரேண்டி.

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

எசப்பாட்டு

# களையெடுக்கப் போற கன்னிமயிலே நில்லம்மா



**ஆண் :**

எம்புட்டு நேரமா
காத்திருக்கேன் ராசாத்தி
ஏறெடுத்து பாக்கத்தான்
மனசு இல்லையோ

**பெண் :**

வெட்டியா நிக்கச்
சொன்னது யாரு
தலைக்கு மேல
வேலையிருக்கு பொன்னையா

**ஆண் :**

ஒன்னப் பாக்கதான்
ஆசையா வந்திருக்கேன்
வெரட்டுறது ஞாயமில்ல
சொல்லிப்புட்டேன் கண்ணே

**பெண் :**

வெட்டிப் பேச்சு
வேணாம் மாமா
பொழுது சாய
வாங்க பேசிக்கலாம்

**ஆண் :**

களையெடுக்கப் போற
கன்னிமயிலே நில்லம்மா
கூடமாட ஒத்தாச
பண்ணட்டுமா சொல்லம்மா

**பெண் :**

பேசியேக் கவுத்துட்டியே
கன்னிமனசக் கவர்ந்திட்டியே
பரிசம் போடுற
நாளத்தான் சொல்லிடு

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# உயிர் வாழும் மரங்கள்

எனக்குப் பின்னாலிருக்கும்
மரத்தின் கிளைவேர்கள்
என்னெதிர் முகம்வரை
விரவியிருக்கும்.
என்னுயரத்திற்கு மேல்
பன்மடங்கு மண்ணில்
ஆழப்பரவி இறுக்கத்தின்
புழுக்கத்தில் வேகும் ஆணிவேர்.
கிளிகளோ, அணில்களோ;
மந்திப்படையோ தின்று
மிச்சம் விட்ட கனிகளில்
சுவைக்கூடி இனித்திடும்.
காற்றிலும், பனியிலும்;
மழையிலும், வெய்யிலிலும்;
செத்து செத்து உயிர்வாழும்
மரங்கள்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# 'பொறி' இன்றி அமையாது உலகு

அறிஞன் இவன்!
அறிவுக்கு வடிவம் தந்த பொறிஞன் இவன்!
நாகரீகத்தின் ஆதியும் இவனே!
நாலு கால் பாய்ச்சலின் மூலமும் இவனே!

பொறிகளுக்கெல்லாம் நெறியாள்கை இவனே!
பஞ்ச பூதங்களை பாட்டிலில் அடைத்தவன் இவனே!
காணும் உலகுக்கு உருக் கொடுத்தது இவனே!
காணாத உலகத்தையும் காட்சிப் படுத்தியவன் இவனே!

அணுவைப் பகுத்து பொருள் சொன்னவன் இவனே!
அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் உள்ளதென அறிவித்தவன் இவனே!
நிலத்தை அகழ்ந்தததும் இவனே!
நிலவைத் தொட்டதும் இவனே!

நித்தம் ஒரு விநோதம் கண்டறிந்த பெருந்தச்சன் இவனே!
சக்கரத்தை சுழற்றியவனும் இவனே!
அச்சை உருளையாக அடித்தவனும் இவனே!
சுற்றளவு விட்டத்தின் 3.14 மடங்கு என அறிந்தவன் இவனே!

ஆற்றை மறித்து அணை கட்டியவன் இவனே!
அதை திசைதிருப்பி பசுமை புரட்சிக்கு வித்திட்டதும் இவனே!
சுபிட்சமெல்லாம் இவன் கொணர்ந்தது!
சுகமான வாழ்வு இவன் தந்தது!

ஆவதெல்லாம் இவனாலே!
அழிவதும் இவனாலே என பழி சுமப்பது எதனாலே?
மருத்துவத்தை கூட ஆள்கிறது பொறியியல்!
மகத்துவமெல்லாம் கொணர்ந்திங்கு சேர்க்குது பொறியியல்!

நெருப்பு பொறி! உந்து பொறி!
தேடு பொறி! கணிப்பொறி!
கொத்து பொறி! கடைசல் பொறி!
பொறி பறக்குது மனித வாழ்வு இவனாலே!
படைப்பதெல்லாம் இவன் என்பதாலே
கடவுளாகிறான் தன்னாலே!



கவிஞர் பொறியாளர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# களத்தில் விதையாக

ஆறலை கள்வர் செருக்கறுத்த
ஆதன்வாழி செல்லூர் தென்னவன்.
நெல்லரி களமர் நிரை காத்த
நீராணிக்கன் ஈந்த நெடுமாறன்.

மீளிபடை வெல்ல களம் புகுந்தான்
மல்லன்மூதூர் காவற்திறவோன்.
கொடியோர் கொற்றம் வீழ்த்தி
களத்தில் விதையாக வீழ்ந்தான்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# நாடகமே இன்று நயம் நாட்டில்

ஆஹா நிழலிலே நிஜமாகிறது
நிம்மதி இல்லா மனிதன் மாண்பில்
மாற்றம் ஒன்றே மண்ணுலகில்
மாறாத நிபந்தனையில்
காலப் பின்னணியில்
கால்கள் இழந்தவன் கூட உழைக்கிறான்

இங்கு ஓடிக் கொண்டிருப்பவன்
அதை கெடுக்கிறான்
ஒவ்வொரு கணமும் ஒரு மாற்றம்
அவன் மனம் பெறும் ஏமாற்றம்
நம்பிக்கை இழந்தும் நாளை இழந்தும்
நரகம் ஆகிறது நாடு

யார் யார் செய்த செய்வினை இது
சமம் என்ற சட்டம் ஒன்று
சம்மதத்துடன் இங்கு
பல பாகுபாடுகள் உண்டு ஏன்
இரக்கமில்லாமல் இறுதிவரை
குருதியை சிந்திக் கொண்டிருக்கும்

சிந்தனை மனிதர்கள்
கண்கள் மூடிக்கொண்டே இருக்கிறது
திறந்தவன் தினம் தினம்
திரையில் ஓடுவது போல்
நிஜத்தை நிழலாக்கிக் கொண்டு
இடைவெளி இல்லாமல்

நயத்தை நாசமாக்கி
பயத்தை பாசம் ஆக்கி பயணிக்கிறான்
பாகுபட்ட பணக்காரன்
பாமரன் வயிற்றை கிழித்து
வலியில்லாமல் வாழ்க்கை தருகிறான்
தன்னை நல்லவன் என்று அது அன்று

நாடே நமக்கு என்றது ஏனோ
அறிவு மழுங்கியது தானோ
அறிவு பெற்றவன் அழித்து வாழ்கிறான்
அறிவு குன்றியவன் அன்பை அள்ளித் தருகிறான்
தரணியின் தாரகம் தகானம் செய்யப்பட்டதோ



பலவேறுபாடு சாதி மத கொள்கைபாடு
அவன் சக்திக்கு ஒரு கோட்பாடு
நீரும் நிலையானது சோறும் கொலையானது
கொள்கை பரப்பும் கட்சிகள் இதுவே நாட்டின் புரட்சிகள்
இனி போராட ஒரு குருதி வேண்டுமே
அக்குறுதி மெய்யாக வேண்டுமே

நம்பிக்கை என்பது நடிப்பானது
நடிப்பு என்பது விலையானது
அறிவு பெற்றவன் அடக்கப்படுகிறான்
ஆட்சி பெற்றவன் ஆளப்படுகிறான்

எல்லாம் அரங்கேற்றம் அதற்கு ஓர் போராட்டம்
பொறுத்தாலும் பொங்கி எழுந்தாலும்
இப் பொன்னான நாட்டில்
மரணமே நம் மாயம்!

கவிஞர் ம. செல்லமுத்து, நூர்த்தப்பூர்

# தமிழ் மகனே வாழ்க

திருக்குவளை கண்டெடுத்த அழகிய பொக்கிஷமே
மக்களின் இதயங்களில் வாழ்ந்த இரத்தினமே
மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்றே
திருக்குறளுக்கு உரை எழுதிய ஆசானே
சங்கத்தமிழுக்கு அழகு சேர்த்த காவியமே
தென்பாண்டிச் சிங்கமே அஞ்சாத நெஞ்சமே
மொழி போரில் களம் பாய்ந்தவரே
இளைய சமுதாயத்தை எழுதிப் பார்த்தவரே
கையில் அள்ளிய கடலே  உனது
மலரும் நினைவுகள் பதினாறு கதையினிலே
படித்து கலைஞரின் கவிதை மழையாய்
மும்முனைப் போராட்டம் கல்லக்குடி களமாய்
தாய் வீட்டில் கலைஞராய் எனது
நெஞ்சுக்கு நீதியாய் சிலப்பதிகார காப்பியமாய்
குறளோவியமாய் கலைஞரின் சிறையில் பூத்த
சின்ன சின்ன மலராய் கதையாய்
முத்துக் குவியலாய் திரைப்பட வசனமாய்
தந்த காட்சியை மறக்க முடியுமா
நவீன தமிழகத்தின் சிற்பியே உனது
புகழும் தமிழும் வாழ்ந்துக் கொண்டிருக்கும்



கவிஞர் ம.ஜெ.அ.பாமிலா பேகம், நாகர்கோவில்

# சுமை யாவும் சுகமல்ல

மூத்தோனாய் பிறந்து
முழு பாரம் சுமக்கும் அண்ணனுக்கு
தோள் கொடுக்கும் அண்ணிக்கும்
சுமை சுகமே!

சுடும் வார்த்தை,
கடும் பார்வை,
குரோத செயல்,
பாரா முகம்;
சுமையை சுலபமாக்குமா?



குமறும் மனதை
புறம் தள்ளுவாள்;
கணவன் கனிவில்.
கிட்டினால் மட்டுமே.

"சுமை" என்று நினைக்க, சுமை
"சுகம்" என்று நினைக்க,சுகம்.
பாரமில்லா சிறு சிறகிற்கு,
இறகு பளுவல்ல;

அன்பெனும் சுகனத்தில்,
பறத்தல் எளிது.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# விடியல்

ஏழ்மையின் விடியல் அரசாங்க
காகிதங்களில் இன்னும் பெயரெச்சமாய்

குடிசைவாசிகள் என்னும் அடையாளத்தின்
வறுமை கோடுகள் இவர்கள்

நகரத்தின் நாகரீகத்தில் தெருவோர
குப்பைகளாய் இவர்கள்

தேர்தல் காலத்தில் மட்டும்
தேவைப்படும் தேவைகளாய் இவர்கள் வாழ்க்கை

அரசியல் கட்சிகளின் பசிக்கு
பிரியாணி கூட்டங்கள் இவர்கள்



பலநேரங்களில் வறுமையின் வாய்க்கரிசி
மட்டுமே இவர்களின் உணவாய்

ஏழைகள் என்னும் அடையாள அட்டை
இவர்கள் கழுத்தில் மரணம் வரை
தூக்கு கயிறாய்

எங்கெங்கு காணினும் வறுமை என்பதே
இவர்களின் தேசிய கீதமாய்

விடியல் என்பது என்றுமே
இவர்களின் விடியாத இரவுகளாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

வெட்டிடும் வார்த்தைகளாலே
வேல்விழியாளையும் ரணம் செய்தாயே
வெட்டிடும் பார்வையும்
வேரறுத்திடவா வேலை செய்கிறாய்

வெட்டிவேர் வாச காதலையும்
வெட்டி ஒதுக்குகிறாயே
வெறுப்பு வந்த காரணமென்னவோ

வெதும்பி தவிக்கிறேனே
வேறுவழிதெரியாமலே
வெல்லமென கொஞ்சியே
வெட்கமும் பல கொண்டே

வேதனை கொடுக்கவா விரும்பினாய்
வெந்து தவிக்கிறேன் நானே
வெட வெடத்து போனேனே
வேல்அம்பு கூர் சொல்லால்

வெப்பம் தாளாமலே
வேற்றிடமறியாமலே
வேறுவழியின்றி வாழ்கிறேனே

வேகமான வாழ்வதிலே
வேட நாடகமானதே எல்லாமே
வேற்றுகிரகாவாசி யானேனே

வேண்டாத தெய்வத்தையும் வேண்டியே
வேண்டுமென்றே விடாமல் கரம் பிடித்தேனே
வேண்டாமென்று நினைக்குமளவு



வெறியாக போன காரணமென்னவோ
வெகுதூர மணவாழ்விலே
வெகுநாளாய் விட்டுவிலகியது ஏனோ?

வெண்ணிலவாய் ஜொலித்திவளை
வெறும் வானில் விட்டுவிட்டு
வேறிடம் சென்றுவிட்டாயே

வெட்டுக்கத்தியை கூர் செய்தாய்
வேட்டையாட நீ சென்றாய்
வெற்றிடமாக்கிவிட்டாயே என் வாழ்வையுமே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆத்தூர்

# நான் ராட்சசன்

நாம் இருவரும் ஒரு நாள் இரவில்,
உன் நெற்றியில் நடந்து
கூந்தலை கோதியவாறு தொலைகிறேன்
ஆடைகளும் அனிகலன்களையும் துறந்து
என்னையே மறந்து உன் தனங்களின்
இடையில் நுழைய,
மெல்லிடையின் வெப்பத்தில்
உருகினேன் மெழுகாய்,
இருவரும் காமத்தின் கதவுகள்
முன் நிற்க,
அந்த கதவுகள் திறக்க
கலவியின் காரணமாக
நான் ராட்சசனானேன்
உன் அனுமதியோடு.



கவிஞர் க. வீரபாண்டி, புளியங்குளம் (மதுரை)

# மனிதன்–கவிஞன்

அவனுக்குள் பிறக்காத
ஒரு கருவை
இன்னொருவன் வந்து எழுதி
கவிதை என்பான்
அவனுக்குள் பிறந்துவிட்டாலும்
இன்னொருவன் பிறப்பான்
இந்த நிதர்சனத்தின் அழுத்தத்தில்
மனிதன் கவிஞனாகிறான்
கவிஞன் மனிதனாகிறான்



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# தேவதையே நீ யாரோ?

பாவகை: கலிப்பா

### ஏந்திசை துள்ளல் ஓசை

இரவாக உனைக்கண்டேன் இனியவளே மதியழகில்
குரலாக வருவாயா குமரியவள் கதைப்பேச
விரலாக எழுதுகிறேன் விழியழகின் கவிதையினை
அரணாக உனைக்காக்க அதிகாலை வருகிறேனே

### அகவல் துள்ளல் ஓசை

எழிலாக கவிபாடி என்னவளே  உனையறியேன்
விழியோடு பாவடித்து வெற்றிவாகை சூடலையே
அழியாத காவியத்தில் அலைகடலின் எழுத்துருவே
கிழியாத இதயத்தின் கிறுக்கல்கள் நீதானே



### பிரிந்திசைத் துள்ளல் ஓசை

கலைநயமாய் கண்டுன்னை காதலித்தேன் அனுதினமும்
கலைமகளாய் அவதரித்தாய் கதிரவனின் ஒளியழகில்
இலைகளின் ஓவியத்தில் இதிகாச தேவதையே
நிலையான என்நெஞ்சை நிலைகுனிய வைத்தாயே.

கவிஞர் ஈ. நவணீதன், பல்லடம்

# சூடும் மலரின் மணம்

மாலை காற்றிலே
மனம் வீசும் நேரத்திலே
குடைக்குள் பூத்த மலராய்
மயிலின் அடிச்சுமையேன

அந்நாள் நினைவுகளாய்
மழை போல் கசிந்து
காற்றில் நாணமும்
சேர்ந்த நடனம் ஆடிட



விண்ணில் நட்சத்திரம்
மலரில் தோன்றும்
மௌனத்தில் பேசிடும்
உயிரின் வீசும்

கூந்தலில் மலர்
இரு மனங்கள் இணைந்ததே
காலம் கடந்தும்
நினைவலைகளில் வீசுகின்றதே.

கவிஞர் திருமதி சிநேஹா வினை, சென்னை

# தீராத நொடிகள்

மலர்ந்தேன் நொடிக்குள்
மயக்கமும் நொடிக்குள்
நிகழ்விலும் நினைவிலும்
நீடித்திருக்கும் நொடிகள்
ஓடிவிளையாட மனத்திடலை
தேர்வு செய்த கள்வனே

பித்தம் கொள்ளும் பார்வையில்
பிடித்தம் செய்து
நெஞ்சுக்குள் ஓர் மாமழையின்
சுழற்சி

சிந்திக்கவே இல்லை சிந்தை
தொலையுமென
அந்திக்குள் வந்துவிடேன்
மீண்டும் அந்த நொடியை
சுவாசிப்போம்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# விதவை

உணர்வுகளை கொன்று புதைக்கும்
நறுமணம் வீசும் மலர்கள்
உயிரற்ற உடலுக்கு காணிக்கை.



கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# சகோதரன்



தம்பி உடையான் படைக்கு அஞ்சான்
இது வார்த்தையல்ல வாழ்வியல்.
சகோதரன் அன்பும் கருணையும் பெற்றவன்
எண்ணத்தில் புதுமையும் உள்ளத்தில்
தெளிவும் பெற்றவன்.

நித்தம் நித்தம் சண்டைதான் ஆயினும்
இல்லை விரிசல்தான் அதுவும் கூட  இனிமைதான்.
அன்பின் நிரந்தரம் பாசத்தின் உறைவிடம்
தந்தை இல்லா எனக்கு தந்தையாய் தோளில் சுமந்து
உலகை காட்டிய   ஆசான் அவன்.

அன்னையாய் ஆசிரியராய் நண்பனாய் நல் வழிகாட்டியாய்
ஊக்கம் தந்து ஏற்றம்தந்த ஏணி அவன்.
என் உணர்வுகளை புரிந்து அனுபவத்தை உரமாக்கி
என்னை உழுது பக்குவபடுத்திய மருத்துவன் அவன்.

கண்ணனின் கீதை  மொழியாய்
என் வாழ்வை வசப்படுத்திய  வளப்படுத்தியவன் .
சகோதரன் என்பது உறவல்ல
உயிருக்கும் மேலான அது ஓர் உணர்வு

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# உணர்வெனும் நீர்க்குமிழி

ஒரு நீர்க்குமிழி போலானது
உணர்வு
எப்போது பிறக்கும்
எப்போது உடையும்
என்பதை "யூகித்தல் சிரமம்"

சமயத்தில்
யாரோ மீது திடீரென மோதி
பட்டென உடைந்து போகிறது

அவ்வப்போது
காற்றில் மிதந்து எங்கோ
காணாமலே போகிறது



சிலது
உருவாகும் முன்னமே
பட்டென வெடிக்கிறது
சிலது
உருவாகும் போதே
வெடித்துத் தெறித்து
கண் கலங்க வைக்கிறது

எந்நேரமும்
அந்த திரவத்தை கண்டபடி ஊதி
உணர்வுக் குமிழிகளை காற்றில்
மிதக்கவிட வேண்டிய கட்டாயமில்லை

தேவைப்படும் இடத்தில்
மிதக்கும் குமிழிகள்
ரசிக்கப் படுவதும்
மிதமிஞ்சி
பறக்கும் குமிழிகள்
வெறுக்கப் படுவதும் தானே
உலக நியதி.

ஒரு நீர்க்குமிழி போலானது
உணர்வு எப்போது பிறக்கும்
எப்போது உடையும்
"யூகித்தால் விலகும் சிரமம்"

கவிஞர் முத்து மீனாட்சி

நான் இரசித்த நான்

அடை மழை
சிலிர்க்க வைத்த ஈரக்காற்று
தனிமையில் நானும்
என்னுடன் இசையும்.

நெடு நாள் நான் வளர்த்த
செடியில் கமலம் போன்ற முளரி.
சூடிய வஞ்சியின்
சல சல கூந்தலோடு.

நடனத்தில் இசையோடு மயங்கி
மண்ணுக்கு முத்தமிடும் திவலையில்
தலை நனைத்த முதல் நாள்.

கொட்டும் மழையில்
பிம்பத்தில் இரசித்த என் முதல் புன்னகை.



பிறை நுழையும் கருமேகத்தை
துழைத்து எனை காணவே
ஏங்கிய காதல் நிறைவில்.

மதியோடு உரையாடியே
கிட்டாத நித்திரை.
அன்று துவக்கமாம்.
நான் இரசிக்கும் நான்.

இன்று பருவம் மறைந்த வசந்தமாய்.
நினைவில் புரண்டன
எனக்கு அந்த நாட்கள் வேண்டுமென.

நடக்காத எதிர்ப்பார்ப்பல்லவா?
இருப்பினும் இரசிக்கின்றேன்..
வாழ்வின் தருணத்தை.

கவிஞர் சீ.கார்த்திகா, பழநி

வலிமையான வார்த்தைகளில்
வாழ்வும் நகருதிங்கே
இதுவும் கடந்து போகும் என்று!




கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

## ஆண்டாள்19 நாச்சியார் 5ஆம் திருமொழி குயிற்பத்து 6முதல் 11

நாச்சியார்தம் ஐந்தாவது திருமொழியில் குயிற்பத்தாம்
பாசுரங்கள் ஆறுமுதல் பதினொன்று! ஆறதனைக்
காண்போமே! என்னுயிர்தான் தங்கிடற்கு மூலகாரணம்
எம்பெருமான் என்னிடத்தே வந்திடலே! கோதைதன்
தலைதன்னை எம்பெருமான் பாதத்தே பொருத்துவதாய்
சாற்றிடினும் வாராதவன் துன்புறுத்தலால் வெண்பல்லும்
செவ்விதழும் வனப்பிழந்தன! அவன்வரவே கூவிடுக
தீங்குயிலே! பாசுரயெண் ஏழுரைக்கும்: கண்ணனவன்
விரோதிகளை விரைந்தழித்து விரகனவன் தன்னுடனே
வருவானோ என்பதற்குக் குறிபார்க்கும்! கோதையவள்
கண்ணனவன் கூடவரில் சேர்த்துவிட வேண்டுகிறாள்!
எட்டாவது பாசுரத்தே கோதையவள் மிக்கன்பும்
பேராற்றல் கண்ணனிடம் கொண்டுளதால் ரக்ஷகனவன்
என்பதனால் அவ்வெளியவன் தன்னிடத்தே சேர்ந்திடவே
வருவானோ என்றகுறி காண்கின்றாள்! தன்னிடத்தே
அன்பிலாரிடம் சேரானே! கன்றுமேய்க்கும் கண்ணனவன்
வருவானேல் அதுநடக்க விழைகின்றாள்! பாசுரயெண்
ஒன்பதது உலகளந்து கொண்ட திறனைதனைக்
கொள்வதில் காட்டுவனோ என்றறிய குறியதனைப்
பார்க்கின்றாள்! சேரவரில் நிகழ்ந்திடவே பேராவல்
காட்டுகின்றாள்! மால்தொண்டு ஆற்றுகையில் கஜேந்திரன்தன்
கால்கவ்விய பொல்முதலை துணித்திட்ட ரக்ஷகனவன்
எம்பெருமான் கோதைதனை சேர்ந்திடவே வந்திட்டால்
எமைஈர்க்கும் அழகனவன் வனப்புமிகு வனிதையரின்
இதயம்வாழ் ஏந்தலவன் ஒன்றிடவே ஆர்வத்தைச்
சாற்றுகிறாள்! பாசுரமாம் பதினொன்றை பாடவல்லார்
கண்ணனவன் ஆய்ச்சியரைக் கூடுவதை சாற்றுவதால்
தன்னுடனே கூடச்சேர்ந்தே பிரிவிலாது மிக்கின்பம்
எம்பெருமான் தன்னோடே காண்பரென பலன்கூறி
உவப்பாளே! நாச்சியார்தம் ஆறாவது திருமொழியாம்
வாரணமாயிரத்தினை தொடர்ந்துணர்ந்து சுவைத்திட்டே மகிழ்வோமே!




கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# ஒரு இரவின் விடியல்

இரவின் விரல் பிடித்து
இசையின் மொழி எடுத்து
வானத் தடாகத்தில்
தேன்குழைத்த விண்மீன்கள்

உடைந்தோடிய நிலவு தேடி
யாழிசையில் கீதம் பாடி
காற்றின் கூடாரத்தில்
களவு போன மாயமென்ன



ஓடிச் சென்று ஓய்ந்த கால்கள்
ஒரு சேர தவமிருக்க
உடைந்த நிலவொளியில்
அல்லியும் முகம் பார்க்க

மண் தூசி கடந்து சென்று
சேறு பூசிய நிலவின் துண்டு
பூமி குடத்தின் தேக்கம் ஒன்றில்
நாணம் பூசிய காட்சியென்ன

விண்மீன்கள் மீட்டெடுக்க
வீணையதை விரல் சொடுக்க
இரவிற்கொரு நீலாம்பரியாய்
பிறைத்துண்டும் போகக் கண்டு

குளிருண்ட குருவி ஒன்று
மரக்குடை நீங்கி வந்து
மண்ணுரித்து விண்பறக்க
விடியலைப் பார்ப்பதென்ன

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# காடுகள்

ஒரு நாட்டின் வளர்ச்சி காடுகளில் வளரும் மரங்களும்
அங்கு விளையும் மூலிகைகளுமே!
நாட்டின் வளர்ச்சியில் காடு முக்கிய பங்கு வகிக்கிறது.
அக்கால மனிதன் காடுகளில் வேட்டையாடியே
தன் ஜீவனத்தை வளர்த்துக் கொண்டானே!

தான் வளர்த்து வரும் கால்நடைகளுமே
வாழ்வாதாரத்திற்கு வழி கோடிட்டெனவே!
நாகரீகம் வளர, வளர காடுகளின் பயனும் அதிகரித்தனவே!

பெரும் பகுதியும் காடுகளால் அன்றோ!
பேப்பர், ரப்பர், சந்தனம், தேன் நம் தேவைகளுக்கு மூலாதாரம் தானே!
அக்கால மனிதன் வேட்டையாடியே விலங்குகளை சாப்பிட்டான்.
பின்பு உணவு உண்ண கற்றுக்கொண்ட பின்
காடுகளை அழித்து விளை நிலங்கள் ஆக்கினான்.
மழை பெய்ய காடுகள் தேவை மலர்களும், கனிகளும்
விளைய காடுகள் தேவை.

ஆல மரம் ஒரு தத்துவத்தையே சொல்கிறதே!
அது வெயிலில் இருந்து கொண்டு
விழுதுகளை நிழலில் இருக்க செய்கிறது.
நம் பெற்றோர்கள் ஆலமரம் போல் தானே!



காடுகள் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும்
மிகப்பெரிய சரணாலயம் தானே!
நாடு செழிக்க காடுகள் அவசியம் தேவையே!
காடுகள் இல்லையேல் நாடுகள் செழிப்படையாது.

கவிஞர் அ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# விசும்பின் விம்மல்

மழையினில் செழித்தெழுந்து
இதயங்கள் சிலிர்க்கின்றன
மலர்களால்.

விடியலில் விசும்பிங்கு
விம்மியழுகிறது விளை நிலங்கள்
யாவும் செழிக்கட்டும்.

அடைமழைத் தூவல்களை
இடையிடையே விசிறுகின்றது
ஒளியிழந்த வானம்.

விண்ணப்பம் இல்லாமலே
விடுமுறை எடுத்துக் கொண்டானா
கதிரவனில்லா வானம்.

மழை நீரை ஈர்த்துக்கொள்ளும்
மண்ணுக்குள் எதிர்பாராத பிரசவங்கள்
ஒன்பதாம் மாத ஆரம்பம்.

மேகக்குன்றுகளில் ஊற்றெடுக்கும்
ஊற்றுப் பீலிகளாய் கூரைமுகடுகள்
குட்டிக்குட்டி நீர்வீழ்ச்சிகள் .

இறைவா,
குன்றுகளுக்கும் குழிகளுக்கும்
பயிர் நிலங்களுக்குமாய்
இம்மழையை நீ அருள்வாயாக.



கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ்

# வளையோசை கலகலவென

கண்கவரும் வகையில் வண்ணவண்ண வளையல்கள்!
அணிந்து மகிழ்ந்திட வஞ்சியரே வாரீரோ!
கணிணி யுகத்தினிலும் கைவளைகள் அணிவதா
என்றெண்ண வேண்டாமே! பலன்கள் ஏராளம்!
சங்க இலக்கியத்தில் பெண்களின் அணிகலனாய்
வளையல்கள் இருந்ததைக் குறிப்பிடும் பாடல்கள்!
கலாச்சாரம் பாரம்பரியத்தின் பகுதியாகும் வளையல்கள்!
மணிக்கட்டுப் பகுதியில் வளையல்கள் உரசுவதால்
உண்டாகும் மின்சாரம் உடலெங்கும் பரவிடுமே!
இரத்தஓட்டம் அதிகரிக்கும்! மேனிக்கு அழகூட்டும்!
கர்ப்ப காலத்தில் வளைகாப்பு நிகழ்வு
கட்டாயச் சடங்காக இன்றளவும் திகழ்கிறதே!
உருவாகும் ஓசையினால் மனமகிழ்வு கூடிடுமே!
குறைந்திடும் மன அழுத்தம்! கருவில் வளர்கின்ற
குழந்தையின் கேட்கும் திறன் அதிகரிக்கும்!
நேர்மறை ஆற்றலை ஈர்த்திடும் சக்தியுண்டு!
"வளையல் விற்ற படலம்" திருவிளையாடற்
புராணத்தில் இடம் பெறுதல் கண்டோமே!
மராட்டியர் கால ஓவியங்களில் இந்நிகழ்வை
பெரிய கோயிலில் கண்டிடலாம் தஞ்சையிலே!
மங்கலப் பொருளாகத் திகழ்ந்திடும் வளையல்கள்!
சங்க இலக்கியத்தில் தொடியென்னும் பெயருண்டு!
சங்கு வளையல்கள் சிறப்பிடும் பெற்றனவே!
கடகம், செம்பு, கைவளை, நவமணிவளை,
சங்குவளை, பவழவளை என்பன வகைகளாகும்!
ஆண்டாள் பாசுரத்தில் அணிகலன்களில் வளையல்கள்
அணிந்ததைக் காண்கின்றோம்!ஆம்பல், வள்ளி,
குவளை பூச்செடிகளின் தண்டுகளை வளைத்து
வளையலாக்கி அணிந்தனர் வேளாண் பெண்டிர்களென
புறநானூற்றுப் பாடலொன்றில் குறிப்புகள் உள்ளதுவே!
வரலாற்றில் ஆன்மிகத்தில் தனியிடம் பிடிக்கின்ற
பெருமைகள் பலவுண்டு அணிகலனாம் வளையலுக்கு!
வாழ்வாதாரம் எந்தனுக்கு வளையல்கள் வியாபாரம்!
வாங்கி அணிந்திடுவீர்! மனமகிழ்வு கொள்வீரே!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

நாடகம்

காட்சி-3

இடம்-ரோடு ; பாத்திரங்கள்: தேன்மலர், சில்வியா, மெர்லின்

**சில்வியா :** பார்த்தாயா மெர்லின் சகாயநாதன் வீட்டிலே அவர் வேலையில்லாமல் எவ்வளவு கஷ்டப்பட்ட போதிலும் வர்ற போற எல்லோருக்கும் வீட்டிற்கு வந்தால் சாப்பாடு போடாமல் அனுப்புவதில்லை.

**மெர்லின் :** உண்மையான விருந்தோம்பல் பண்பு அவர்களிடம் தான் இருக்கிறது. எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. எழிலரசியும் அவர் சொல்வதைக் கேட்டு வருகிறவர்களுக்கெல்லாம் உணவு கொடுத்து உபசரிக்கிறார்.

**தேன்மலர் :** உண்மையிலே கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பம். எவ்வளவு தான் கடன் தொல்லைப்பட்டாலும் வீட்டிற்கு வருகிறவர்க்கெல்லாம் உணவு கொடுக்கும் விருந்தோம்பல் பண்பு எல்லோருக்கும் வருவதில்லை.

**மெர்லின் :** ஆமாம். தேன்மலர் உன் வீட்டுக்காரருக்கு நல்லபடியாக உடம்பு தேறிவிட்டதா?

**தேன்மலர் :** பரவாயில்லை. ஆங் அன்றைக்கு எழிலரசி வீட்டில் பார்த்தோமே, ரோட்ரிக்ஸ். அவருக்கு மிகவும் உடல் பலவீனமடைந்து இப்போது ஆஸ்பத்திரியில் இருக்கிறாராம். அவரும் இப்படித் தான் சொல்லச் சொல்ல நிறுத்தாமல் குடித்துக் குடித்தே உடம்பைக் கெடுத்துக் கொண்டாராம். இப்போது கல்லீரலில் ஏதோ பிரச்சனையாகி விட்டதாம். (எழிலரசியும், சகாயநாதனும் அந்த வழியாக வர) என்ன எழிலரசி இந்தப் பக்கம்.

**எழிலரசி :** ரோட்ரிக்ஸை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்து விட்டு வருகிறோம். பாவம் மனிதர் ரொம்ப கஷ்டப்படுகிறார்.

**சகாய நாதன்:** எப்படியும் தேறி விடுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால் இந்த எமல்டா தான் மிகவும் வாட்டமாக இருக்கிறார். கணவருக்கு ஏதும் ஆகி விடுமோ என்று பயந்து எதுவும் சாப்பிடாமல் எடுக்காமல்...

**மெர்லின் :** என்ன செய்வது தேவன் விட்ட வழியென்று தாமே இருக்காமல் எமல்டாவை இறைவா என் கணவரை கண்டிப்பாக எனக்குக் கொடும் என்று ஆண்டவரை நோக்கி கெஞ்சி மன்றாட சொல்ல வேண்டியது தானே.

**எழிலரசி :** அவள் உருகி ஜெபிக்கிற மாதிரி யாராலும் ஜெபிக்க முடியாது. அவ்வளவு உருகி உருகி ஜெபிக்கிறாள். கண்டிப்பாக அவள் ஜெபங்கள் கேட்கப்படும். தேவன் அவள் ஜெபத்திற்கு கண்டிப்பாக செவி சாய்ப்பார்.

**சகாய நாதன் :** வாருங்களேன். வீட்டிற்கு போய்ச் சாப்பிட்டு விட்டுச் செல்லலாமே.

**மெர்லின் :** இல்லை. நாங்கள் சாப்பிட்டு விட்டுத் தான் கிளம்பினோம். இன்னொரு நாள் சந்திக்கலாம்.

தொடரும் ...

திரு இரீஜகை நிலவன்

# விழியின் ஓசை

## நூல் அனுபவம்

நூலாசிரியர் : சீ. பாஸ்கர்
நூல் வெளியீடு : மௌவல் பதிப்பகம்
நூல் விலை : 180; பக்கம் : 160; நூல் வாங்க : 9941147699.

கவிஞர் சீ பாஸ்கர் அவர்களின் விழியின் ஓசை கவிதை நூல் கிடைக்கப்பெற்றதும் வாசிப்பில் தீவிரமாகிவிட்டேன். இவர் ஒரு ஆசிரியர் இவருடை கவிதையை படிக்கும் போது நானும் அவருடைய மாணவனாக மாறிவிட்டேன். எப்படியென்றால் மரத்தடி மாணவன் போல. சொற்கள் என்பது வேரும் தண்டும் போல, கவிஞருக்கு அது இயல்பாய் அமைகிறது. கவிஞர் சீ பாஸ்கர் அவர்கள் வார மாத இதழ் என எல்லா இதழ்களிலும் வலம் வந்துக்கொண்டிருப்பவர்.

கவிஞரின் கவிதையில்

நீர் மூலக்கூறு உருவாவது பற்றி
வேதியியல் ஆசிரியர் சொன்னதை கவனிக்காமல்
மரத்திலிருந்து உதிர்ந்த பூவினை வைத்து
தாவரவியல் படித்த மாணவர்கள்.

இந்த கவிதையை படித்ததும்
தான் மரத்தடி மாணவனாகிவிட்டேன்.




அம்மா இல்லாத வீடு கவிதையில்,

அக்காவிடம் அவ்வப்போது
சின்ன சொன்ன சண்டைகள் போடும்
சின்னவள்
சொல்லிக்கொண்டே இருக்கிறாள்
அம்மா வந்ததும்
சொல்லிவிடுவேன் என்று
பெரியவள் பெரியவளான பின்புதான்
இன்னொரு அம்மா உருவாகிறாள்
இல்லத்தில்.

உண்மை தான் அம்மா இல்லாத வீட்டில் அக்கா தான் இன்னொரு அம்மா.

திரு சீ. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

## நூல் அனுபவம்

விடுமுறை கவிதையில்

இரவு சூரியனுக்கு விடுமுறை
பகல் சந்திரனுக்கு விடுமுறை
அகிம்சை ஆயுதங்களுக்கு விடுமுறை
தூக்கம் கண்களுக்கு விடுமுறை
விடியல் கனவுகளுக்கு விடுமுறை
அறுவடை வயலுக்கு விடுமுறை
இளமை மழலைக்கு விடுமுறை
முதுமை இளமைக்கு விடுமுறை
மரணம் வாழ்க்கைக்கு விடுமுறை

விடுமுறைகளின் விடுமுறை இது எவ்வளவு எளிமையான சொற்களின் மூலம் உரக்க சொல்லிவிட்டார் கவிஞர்.

தண்ணீர் அஞ்சலி கவிதையில்

மழையின்றி பயிர்கள் கருகுவதைப் பார்த்து
மனம் உடைந்து
தற்கொலை செய்துகொண்ட
விவசாயிகளின் இறுதி ஊர்வலத்தில்
நல்ல மழை .

நல்லோர்களின் வாழ்வில்
மழையென்பது இது தானோ.




வீட்டிற்குள் நுழைந்த வானம் கவிதையில்

பட்டம் விட்டு
விளையாடிக்கொண்டிருக்கும்
சிறுவர்கள் வீடு திரும்புகையில்
மறக்காமல் எடுத்துக்கொண்டு
வந்துவிடுகின்றனர்
அவர்களின் வானத்தையும்.

திரு சி. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

## நூல் அனுபவம்

இந்த கவிதையை படிக்கும் போது இது ஒரு குறுங்கவிதை என நினைக்கலாம் ஆனால் அது இல்லை . இந்த கவிதையை படித்ததும் நான் உணர்ந்தது ஒரு ஜென் ஒரு ஹைக்கூ என்றே கூறலாம் .

ஆம் வானத்தை வீட்டிற்கு எடுத்து வருவதா அதெப்படி சாத்தியம் என்று நினைத்தேன் பொதுவாக கடலை ஒரு வாளியில் அல்லது பாத்திரத்தில் எடுத்துவந்து கேள்வி பட்டிருக்கிறோம் ஆனால் கவிஞர் தன் கவிதை மூலம் வானத்தை வீட்டிற்கே எடுத்துவந்து விட்டார்.

அடுத்த கவிதை பிடித்த ஹைக்கூ என்றே சொல்லலாம்

கூட்டிப் பெருக்கும் வரை
சிரித்துக் கொண்டுதான் இருந்தன
உதிர்ந்த அத்தனைப் பூக்களும் ..

வாழ்வென்பதும் அது தானே சிரித்து கொண்டே வாழ்வதும்
வீழ்ந்த பின்பும் புகைப்படத்தில் சிரித்துக்கொண்டே இருப்பதுவும் தானே ..

கடவுளின் புன்னகை கவிதையில்



வெவ்வேறு அளவுகளில் கண்கள்
மேலும் கீழுமாக காதுகள்
எப்போது விழுமென்றே தெரியாத
நிலையில் தும்பிக்கை
ஒட்டிய வயிறு என
தன் விருப்பப்படி வடிவமைத்துக் கொண்டிருக்கும்
குழந்தையின் ஆசையை நிறைவேற்ற
குறைகள் அனைத்தையும் சகித்துக்கொண்டு
அழகாக புன்னகைத்துக்கொண்டே
அருள்பாலிக்கிறார் களிமண் விநாயகர்.

இது குழந்தைகளின் உலகம் இப்படி தானிருக்கும் ..கடவுள் அதை எப்போதும் ஏற்றுக்கொள்வார்.

திரு சீ. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

## நூல் அனுபவம்

சில ஹைக்கூ

காற்றும் தரும்
கற்றும் தரும்
மரம்

வெட்டிய மரங்களை ஏற்றிச்செல்லும்
லாரியில் எழுதியிருக்கிறது
மரம் வளர்ப்போம்.

புத்தகம் முழுக்க தன் தந்தையின் மீதான அன்பும் கவிதைகளும் நிறைந்திருந்தாலும் சிந்தனையால் இதுபோன்ற பல கவிதைகளையும் நிரப்பி இருக்கிறார் கவிஞர் சீ பாஸ்கர் அவர்களுக்கு எனது நிறைந்த மனத்து அன்பும் வாழ்த்துகளும் ..




திரு சீ. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

## நூல் அனுபவம்

கவிதையின் மீதான ஆர்வம் சமீப காலமாக மேலோங்கி வருகிறது. கவிதைகளை உருவாக்கும் ஒவ்வொருவரையும் கவிஞர் என்றே சமூகம் போற்றி புகழ்கிறது.

கவிஞனால் கவிதையை உருவாக்கிட முடியும். கவிஞனை எப்படி உருவாக்குவது?




கவிஞன் என்பவன் உருவாக்கப் படக்கூடியவன் அல்ல, பிறவியிலேயே உருவெடுத்து வருபவன், அதன் காரணமாகத்தான் சமூகத்தில் அவனுக்கென்று ஒரு தனி இடம் உள்ளது.

கவிதை எப்படி உருவெடுக்கிறது? அதனால் உலகிற்கு என்ன நன்மை உண்டாகிறது? என்ற கேள்விகளுக்கு பதில் தேடும்போது, உலக மகா கவிஞனாக நாம் போற்றி மதித்திடும் பாரதியின் ஒரு கவிதையே அதற்கு பதில் கூறுகிறது.

"உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின்
 வாக்கினிலே ஒளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
 கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப்
 பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
 இங்கமரர் சிறப்புக் கண்டார்!"

என்று கவிதையைப்பற்றி பாரதி குறிப்பிட்டுள்ளார், உள்ளத்தில் உண்மை ஒளியை நாம் பெற்று விட்டால் நம் வாக்கினிலே ஒளியுண்டாகி வெள்ளத்தின் பெருக்கைப்போல் கவிப்பெருக்கும் நம்மிடமிருந்து தோன்றும் என்பது பாரதியின் வாக்கு.

கவிதைகள் பற்றி பலரும் தங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

திரு இரஜகை நிலவன், மும்பை

## நூல் அனுபவம்

"ஆற்றல் மிக்க உணர்ச்சிகள் தாமாக பொங்கி வழிவதே கவிதை" என்கிறார் கவிஞர். வோர்ட்ஸ் ஒர்த்.

"கவிஞர் தம் உள்ளத்தில் தோன்றிய அரிய உண்மைகளை இன்ப வடிவமாகத் தெளிந்த மொழியில் வெளியிடுவது கவிதை" என்கிறார் கவிமணி.தேசிக விநாயகம்பிள்ளை.

"கால்வாய் இல்லாத இடத்தில் பெய்யும் ஒளி மழையே கவிதை" என்கிறார் கீட்ஸ்.

"கவிதை என்பது வார்த்தைகளில் இல்லை ஜீவனில் உறைவது" என்கிறார் லா.ச. ராமமிருதம்.

"மொழியும் எழுதுகிறவனின் மனமும் இணைந்து இயங்குகிற போதுதான் கவிதை பிறக்கிறது" என்கிறார் வண்ணநிலவன்.

இப்படி ஒவ்வொன்றாக ஒவ்வொருவர் சொன்னதையும் சொல்லிக்கொண்டே போகலாம். கவிதை என்பது கற்பவர் உள்ளத்தை ஈர்க்கும் சக்தியாக இருந்திட வேண்டும், சிறந்த லட்சியங்களை நம் மனக்கண்முன் சித்தரிப்பதாக இருந்திட வேண்டும். உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் வெளியிடுவதாக இருந்திட வேண்டும். கற்பனை என்பது ஒவ்வொரு கவிதைக்கும் உயிர் போன்றது, கற்பனையுடன் இருக்கும் கவிதையிலும் பொருளுடன் இருத்தலே கவிதைக்கு சிறப்பானது.

கவியாற்றல் பெற்றவராக இருப்பினும் கவிதையை தெளிவாக உரைத்தல் வேண்டும், அது வாசிப்பவருக்கு வழிகாட்டிடக் கூடியதாக இருந்திட வேண்டும் என்பதுடன், சமூக அவலங்களுக்கு எதிராக, அடிமைத்தனத்திற்கு எதிராக, ஏய்ப்போரும் இல்லாரும் இல்லாத உலகிற்கு வழிகாட்டுவதாகவும் இருந்திட வேண்டும்.

விண்ணும் தாங்காத முகிலினங்கள்!
பெண்மையைப் போற்ற வந்த பெருங்கவியே!
பார் போற்றும் தாய்மை சிறக்கவே
மாந்தர் பெருமைகளை எடுத்துரைத்த கவிஞரே!
மடியினில் சுமப்பவளும் கருவறையில் சுமந்தவளும்
பெண்ணே என போற்ற வந்த பெருங்கவியே!

திரு இரஜகை நிலவன், மும்பை

# பெரியசாமித் தூரன்

கட்டுரை

## பிறப்பு, கல்வி



பெரியசாமித் தூரன் ஈரோடு மாவட்டத்தில் மொடக்குறிச்சி அருகே மஞ்சக்காட்டு வலசு என்ற ஊரில் பழனி வேலப்பக் கவுண்டருக்கும், பாவாத்தாளுக்கும் செப்டம்பர் 26, 1908-ல் பிறந்தார். இவரது இயற்பெயர் மஞ்சக்காட்டு வலசு பழனியப்பக்கவுண்டர் பெரியசாமி.

சொந்த ஊரான மொடக்குறிச்சியில் தொடக்கக் கல்வி பயின்றார். உயர்நிலைக் கல்வியை ஈரோடு மகாஜனசபா உயர்நிலைப்பள்ளியில் படித்தார். 1927-ல் சென்னை மாநிலக் கல்லூரியில் அறிவியல் பாடங்களில் இண்டர்மிடியட் முடித்தபின் 1929-ல் கணிதத்தில் எல்.டி (ஆசிரியர் பயிற்சி ) பட்டம் பெற்றார்.

1931-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் நாள் தூக்கிலிடப்பட்டபோது அதை எதிர்த்து மாணவர் கிளர்ச்சியில் கலந்து கொண்டமையால் இளங்கலை இறுதி ஆண்டுத் தேர்வை எழுதாமல் புறக்கணித்தார்.

## தனிவாழ்க்கை

தூரன் மே 01, 1939-ல் காளியம்மாளை மணம் செய்து சாரதாமணி, வசந்தா, விஜயலட்சுமி ஆகிய பெண்மக்களுக்கும் சுதந்திரக்குமார் என்ற மகனுக்கும் தந்தையானார்.

1929 முதல் ஆசிரியராக பணியாற்றிய தூரன் சென்னையில் 1948-1968 வரை தமிழ்க் கலைக்களஞ்சியப் பணியில் முதன்மை ஆசிரியராகவும் 1968 முதல் 1976 வரை குழந்தைகள் கலைக்களஞ்சியப் பணி முதன்மை ஆசிரியராகவும் பணியாற்றி 1976-க்குப்பின் ஓய்வுபெற்று முழுநேர எழுத்தாளரானார். கோவையில் வாழ்ந்து மறைந்தார்.

திரு அ வில்சன், இதழாசிரியர்

## தூரன் வகித்த பொறுப்புகள்

தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலர்
குழந்தை எழுத்தாளர் சங்கச் செயலர்
தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்
பண்ணாராய்ச்சிக் குழு ஒருங்கிணைப்பாளர்

## விருதுகள்

1968 இந்திய குடியரசுத் தலைவர் வழங்கிய பத்ம பூஷன் விருது.
1970 தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம் வழங்கிய கலைமாமணி விருது.
1972 தமிழ் சங்கம் வழங்கிய, இசைப் பேரறிஞர் விருது.
1978 எம்.ஏ.சி. தொண்டு நிறுவனத்தால் வழங்கப்பட்ட அண்ணாமலை செட்டியார் விருது.

## இலக்கிய இடம்

பெரியசாமித் தூரன் ஐந்து தளப் பங்களிப்புகளுக்காக நினைவுகூரப்படுகிறார். பெரியசாமித் தூரனின் முதன்மைப் பங்களிப்பு தமிழின் முதல் முழுமையான நவீனக்கலைக்களஞ்சியத்துக்கு ஆசிரியராக இருந்து அவர் உருவாக்கியளித்தமைதான்.
பாரதி ஆய்வாளர்களில் முன்னோடியாக அவர் மதிப்பிடப்படுகிறார்.
தமிழிசைப் பாடல்களில் அவருடைய கொடை என்றும் வாழ்கிறது.
குழந்தைக் கவிஞராக பெரியசாமித் தூரன் இன்றும் பயிலப்படுகிறார்.
மரபுக்கவிஞராக பெரியசாமித்தூரன் நாமக்கல் கவிஞர் மரபு என்னும் பாரதிக்கு பிந்தைய கவிமரபைச் சேர்ந்தவர். தேசிய இயக்கப் பார்வை, இசைத்தன்மை கொண்ட எளிமையான மொழி, எளிய கட்டமைப்பு கொண்ட கவிதைகளை எழுதிய கவிஞர் அவர்

## நூல்கள்

2008-ல் தமிழக அரசால் பெரியசாமித் தூரனின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இணையநூலகத்தில் அந்நூல்களை இலவசமாக வாசிக்கலாம்.

திரு அ வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

**நூல்கள்**

**2008-ல் தமிழக அரசால் பெரியசாமித் தூரனின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இணையநூலகத்தில் அந்நூல்களை இலவசமாக வாசிக்கலாம்.**

**இசைப்பாடல்கள்**

- தமிழிசைப் பாடல்கள் (15-ம் தொகுப்பு)
- தமிழிசைப் பாடல்கள் (7-ம் தொகுதி)
- இசைமணி மஞ்சரி
- இசைமணிமாலை இணையநூலகம்
- முருகன் அருள்மணி மாலை இணையநூலகம்
- கீர்த்தனை அமுதம் இணையநூலகம்

- நவமணி இசைமாலை
- மரபுக் கவிதைகள்
- மின்னல் பூ
- இளந்தமிழா
- பட்டிப் பறவைகள்
- தூரன் கவிதைகள்
- நிலாப் பிஞ்சு
- காற்றில் வந்த கவிதை
- வசனகவிதைகள்
- இருளும் ஒளியும்
- அறிவாய் நீ
- மேலே பற
- மானிடா எழுக
- யாரது?
- வாழ்க்கைப் பயணம்
- சந்திப்பு
- நமது வழி
- சிறார் இலக்கியம்
- நல்ல நல்ல பாட்டு
- சங்ககிரிக் கோட்டையின் மர்மம்
- மழலை அமுதம்
- நிலாப்பாட்டி - இணையநூலகம்
- பறக்கும் மனிதன்
- ஆனையும் பூனையும்
- கடக்கிட்டி முடக்கிட்டி
- மஞ்சள் முட்டை
- சூரப்புலி
- கொல்லிமலைக் குள்ளன்
- ஓலைக்கிளி
- தரங்கம்பாடித் தங்கப் புதையல்
- நாட்டிய ராணி
- மாயக்கள்ளன்
- தம்பியின் திறமை
- கட்டுரைகள்
- தூரன் எழுத்தோவியங்கள்
- காலச் சக்கரம் (இதழியல்)

**சிறுகதை**

- பிள்ளைவரம்
- மா விளக்கு
- உரிமைப் பெண்
- காளிங்கராயன் கொடை
- தங்கச் சங்கிலி

திரு அ வில்சன், இதழாசிரியர்

# பெரியசாமித் தூரன்

## கட்டுரை

அறிவியல் நூல்கள்

- பாரம்பரியம் (1956)
- அறமனம் (1957)
- குமரப்பருவம் (1962)
- மனமும் அதன் விளக்கமும் (1960)
- குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும் (1953)
- பெற்றோர் கொடுத்த பெருங்கொடை (1958)



பாரதி ஆய்வுகள்

- பாரதியும் பாரத தேசமும்
- பாரதியார் நூல்கள் ஒரு திறனாய்வு இணையநூலகம்
- பாரதியும் பாப்பாவும்
- பாரதித் தமிழ்
- பாரதியும் கடவுளும் இணையநூலகம்
- பாரதியும் சமூகமும் இணையநூலகம்
- பாரதியாரின் நகைச்சுவையும் நையாண்டியும் இணையநூலகம்
- பாரதியும் தமிழகமும் இணையநூலகம்
- பாரதியும் உலகமும் இணையநூலகம்
- பாரதியும் பாட்டும்
- பாரதி வசனத்திரட்டு

மொழிபெயர்ப்பு

- இரவீந்திரர் குழந்தை இலக்கியம் (1903)
- பறவைகளைப் பார் (1970)
- கானகத்தின் குரல் (The Call of the wild) (1958)
- தாகூரின் ஐம்பெருங் கட்டுரைகள்
- கடல் கடந்த நட்பு (1963) - நயோமி மிச்சிஸன் எழுதிய 'ஜூடி அண்ட் லக்ஷ்மி' நாவலின் தமிழாக்கம்

நாடகம்

- அழகு மயக்கம் (1955)
- சூழ்ச்சி (1955)
- பொன்னாச்சியின் தியாகம் (1955)
- ஆதி அத்தி (1958)
- காதலும் கடமையும் (1957)
- மனக்குகை (1960)
- இளந்துறவி (1961)
- பதிப்பித்த நூல்கள்
- காளமேகப் புலவரின் சித்திரமடல்
- வடிவேல் பிள்ளையின் மோகினி விலாச நாட்டிய நாடகம்
- அவிநாசிப் புலவரின் திங்களூர் நொண்டி நாடகம்
- சாமிநாதக் கவிஞரின் கொன்றைவேந்தன் வெண்பா

திரு அ வில்சன், இதழாசிரியர்

**இறுதிக்காலம், மறைவு**

தூரன் 1980-ல் வாதநோயால் பாதிக்கப்பட்டார். தமிழகத்தில் நிகழ்ந்த அரசியல் மாற்றத்தின் விளைவாக காங்கிரஸ்காரரான தூரன் கடைசிக்காலத்தில் அரசு மற்றும் பல்கலைக் கழகங்களின் புறக்கணிப்புக்கு உள்ளானார். பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களின் உதவி மட்டுமே அவருக்கு இருந்தது. ஜனவரி 20, 1987-ல் மரணமடைந்தார்.



**நன்றி**
https://tamil.wiki/

## நாளை நமதே

**தினமும் ஓய்வில்லாமல்**

**உழைப்பதால் தான்**

**எல்லா இடத்திலும்**

**உயரத்தில் உள்ளது**

**கடிகாரம்.**

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com